Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ். நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | வைகாசி 03 | ஹிஜ்ரி 1427 | ற.ஆகிர் 20 | (19.05.2006) | வெள்ளிக்கிழமை | இதழ் 231

# சர்வதேச சமூகத்தின் தடைகள் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்!



## அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

லண்டன் —

விடுதலைப் புலிகள் மீது சர்வதேசத்தால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு மேலதிக தடை நடவடிக்கையும் - பலவீனமாக உள்ள சமாதான முயற்சிகளை சீர்குலைத்து - பாரதூரமான எதிர்விளைவையே ஏற்படுத்தும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் எச்சரித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்கக்கூடும் என வெளியாகும் செய்திகள் தொடர்பாக தமிழ்நெற்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம் —

முகமாலையில் விடுதலைப் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

### புலிகள் மீதான தடை

## ஐரோப்பிய யூனியனின் முடிவு இன்று வெளியாகும்

கொழும்பு —

விடுதலைப்புலிகள் மீதான தடை விவகாரம் தொடர்பான முடிவு ஐரோப்பிய யூனியனால் இன்று அறிவிக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய யூனியன் ஏற்கனவே விடுதலைப்புலிகள் மீது பயணத் தடையை விதித்துள்ளது. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பு வந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி றொனால்ட் காம்ப் - புலிகள் மீது தடைவிதிக்குமாறு ஐரோப்பிய யூனியனிடம் அமெரிக்கா கேட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில், இன்று ஐரோப்பிய யூனியனின் இது தொடர்பான முடிவு அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இலங்கை அரசு விடுதலைப்புலிகள் மீது தடைவிதிக்குமாறு ஐரோப்பிய யூனியனைக் கேட்டிருந்தது.

ஆயினும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகளை கண்டித்து கூட்டுறவாளர்கள் பேரணி!

கிளிநொச்சி —

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இராணுவத்தினரும், துணை இராணுவக் குழுவினரும் இணைந்து நடத்தி வரும் படுகொலைகளைக் கண்டித்து நேற்று கிளிநொச்சியில் கண்டனப் பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கண்டனப் பேரணி - நேற்றுக்காலை 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமானது.

பிரதான வீதி வழியாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் செயலகத்தை இந்தப் பேரணி சென்றடைந்தது.

இந்தக் கண்டனப் பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், மா.க.ஈழ வேந்தன் ஆகியோரும் மாணவர்கள், பொது மக்கள், கூட்டுறவாளர்கள்

(08 ஆம் பக்கம் பார்க்க)




# உயிருக்கு உத்தரவாதம் தாருங்கள்;

## என்னை இலகுவில் கொல்லமுடியாது

# உயிருக்கு உத்தரவாதம் தாருங்கள்;

## அல்லைப்பிட்டி மக்கள் கோரிக்கை!



யாழ்ப்பாணம் —

தமது உயிர்களுக்கு உத்தரவாதம் தரப்படவேண்டும் என்று அல்லைப்பிட்டி மக்கள் யாழ்.அரச அதிபர் தலைமையிலான அரச, அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டனர்.


பிலிப் நேரியார் ஆலயத்தில் அல்லைப்பிட்டி மக்களின் நிலை குறித்து நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு வணபிதா சகாயராசா தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க.கணேஸ், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, வேலணை பிரதேச செயலாளர் க.நந்த கோபாலன் ஆகியோருடன் யு.என்.எச்.சி.ஆர், யுனிசெப், வேல்ட் விஷன், ஜி.ரி.இசற், ஐ.சி.ஆர்.சி, வன்முறைகளுக்கு எதிரான அமைப்பு மற்றும் பல உள்நாட்டு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அல்லைப்பிட்டியில் வாழும் (08 ஆம் பக்கம் பார்க்க)

# என்னை இலகுவில் கொல்லமுடியாது

## என்கிறார் இராணுவத் தளபதி



கொழும்பு —

என்னை எவராலும் இலகுவாக கொன்றுவிடமுடியாது என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத் தளபதியை செவ்வாயன்று ஜே.வி.பி பிரசார செயலர் விமல் வீரவன்ச, நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர, ஜனாதிபதியின் ஆலோசகர் பாசில் ராஜபக்ஷ ஆகியோர் சுமார் ஒன்றரை மணிநேரம் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது இராணுவத் தளபதி தான் குணமடைந்து வருவதாகவும், விரைவில் தனது கடமைகளைப் பொறுப்பேற்பேன் என்றும் தன்னை எவராலும் இலகுவாக கொன்றுவிடமுடியாது என்றும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டதாக கொழும்புத் தகவல்கள் (08 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் இருவர் சுட்டுக்கொலை!


அம்பாறை —

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் நேற்று இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் கல்முனை நற்பிட்டி முனையைச் சேர்ந்தவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாவிதன்வெளி பிரதேசசபை வேட்பாளருமான (08 ஆம் பக்கம் பார்க்க)

# பேர்ள் குறூஸ் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கவில்லை!

## இந்திய கடற்படைத் தளபதி தெரிவிப்பு




கொழும்பு —

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளான பேர்ள் குறூஸ் கப்பலுக்கு இந்திய கடற்படை பாதுகாப்பு அளிக்கவில்லை என்று இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் தெரிவிததார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் - பாக்கு நீரிணை கடற்கண்காணிப்பை அதிக (08 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் முயற்சி முகமாலையில் முறியடிப்பு!

கிளிநொச்சி —

முகமாலையில் நேற்றுமுன் தினம் இரவும், நேற்று அதிகாலையும் விடு தலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டதாக விடுதலைப் புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவிலும், நேற்று அதிகாலை 2.30 மணியளவிலும் இந்தத் தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் மறுப்பு

யாழ்ப்பாணம் —

அளவெட்டி பகுதியில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் கண்ணிவெடிகளை அகற்றி மக்கள் பாவனைக்கு வழங்கிய பகுதியில், மிதிவெடியில் சிக்கிய ஒருவர் தனது இடது காலை இழந்தார் என வெளிவந்த செய்தியை அந்த நிறுவனம் மறுத்துள்ளது. இது தொடர்பாக நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் டேவிட் எலியொட் அனுப்பியுள்ள மறுப்பறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

குறித்த சம்பவம் எமது நிறுவனம் கண்ணிவெடி அகற்றிய பிரதேசத்தில் இடம்பெறவில்லை. மாறாக நாம் கண்ணிவெடி அகற்றிய பகுதியிலிருந்து நூறுமீற்றர் தொலைவிலேயே நடைபெற்றது. அந்தப் பகுதி தனியான கண்ணி வெடிகளுள்ள பிரதேசமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அலுவலக நேரத்தை மாற்றுவதற்கு அனுமதி

கொழும்பு —

அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் ஆரம்பமாகும் நேரத்தை மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இதன்பிரகாரம் அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் ஆரம்பமாகும் நேரத்தை அரை மணித்தியாலம் முன் நகர்த்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலைகள் 7.30 இற்கு ஆரம்பமாகும் அரச அலுவலகங்கள் ஆரம்பமாகும் நேரமும் அரை மணித்தியாலம் முன் நகர்த்தப்படும். இது சம்பந்தமான சுற்று நிருபம் விரைவில் பாடசாலைகளுக்கும், திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

# தமிழ் மக்கள் மீதான படுகொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க நடவழிக்கை எடுங்கள்

## நோர்வே தூதரகத்துக்குக் கடிதம்

வேலணை —

தமிழ் மக்கள்மீது தொடரும் படுகொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனத் தீவக மக்கள் நலன் காப்பகம் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். தீவகத்தின் அல்லைப்பிட்டி வேலணை, புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் கடந்த சனி இரவு கடற்படையினர் நிகழ்த்திய வெறியாட்டத்தில் குழந்தைகள் உட்பட அப்பாவித் தமிழர்கள் 13 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

அல்லைப்பிட்டியில் வைத்து கடற்படையினர் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட எண்மர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இதில் நான்கு மாதக் குழந்தையும், நான்கு வயதுடைய குழந்தையும் அடங்கும்.

இந்தச் செயலை மனித தர்மத்தின் அடிப்படையில் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், மனித நேயம் படைத்த தங்களது உயரிய மனச்சாட்சிக்குச் சமர்ப்பிக்கிறோம். இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதென்ற உத்தரவாதமற்ற நிலையில் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலை விரிந்து செல்கிறது.

அதேவேளை - வேலணை மேற்குப் பகுதியிலுள்ள வீடொன்றுள் அதேயிரவு புகுந்த மற்றொரு கடற்படையணியொன்று ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரைப் படுகொலை செய்துள்ளது. இவர்கள் மூவரையும் படுகொலைசெய்த கடற்படையினர் - சுமார் 50 மீற்றர் தூரத்திலுள்ள அவர்களுக்குச் சொந்தமான தொலைத்தொடர்பு நிலையத்தையும் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.

இந்தப் பச்சிளம் குழந்தை படைக்கு என்ன செய்தது? ஏன் கொன்றார்கள்? எதற்காகக் கொன்றார்கள்? பச்சிளம் குழந்தையைப் பலியெடுப்பதால் படையினரின் கொலை வெறி அடங்கிவிடுமா? தொடருமா?என்பது கேள்விக்குறி.

தீவகப் பிரதேசம் முழுமையாக கடற்படையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அவர்கள் அறியாமல் இந்தக் கொலைகள் நடந்திருக்க முடியாது. இந்தக் கொலைகளுக்கு கடற்படையே பொறுப்பேற்க வேண்டும்.

ஜெனிவாப் பேச்சு வார்த்தைக்குப் பின்பு யாழ்.குடாநாட்டில் பரவலாக நடைபெற்ற மனிதப் படுகொலைகளின் அதி உச்சமான மக்களின் நெஞ்சைப் பிழிந்தெடுத்த ஒரு கோர நிகழ்வு என்றால், தற்போது அல்லைப்பிட்டியில் நடந்த மனிதப் படுகொலைகளாகும்.

அன்றாடம் உழைத்து, களைத்து இரவு வேளையிலாவது நிம்மதியாக உறங்க முற்படும் இளம் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட நிர்க்கதி உலகில் வேறு யாருக்கும் ஏற்படக்கூடாது.

துள்ளித் திரிந்த மழலை மொழி பேசுகின்ற இந்தப் பச்சிளம் குழந்தைகள் துடிக்க துடிக்க கொல்லப்பட்ட உயிர் பிரிகின்ற அந்தப் பரிதாப நிலையில் கூட சிங்கள இராணுவத்தின் மனநிலை மாறவில்லை.

சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் கைக் கூலிகளாகச் செயற்படும் ஆயுதப் படைகளின் அட்டூழியங்களால் யாழ்.குடாநாடு அதிர்கிறது. இன வன்முறை தலைவிரித்தாடுகிறது. தமிழனது வாழ்வு இன்று கேள்விக் குறியாக மாறியுள்ளது. 15 மணி நேரத்துக்குள் 15 மனிதக் கொலைகள். தீவகத்தில் 13 கொலைகளும், பத்தமேனி, ஆவரங்கால் பகுதிகளில் தலா ஒவ்வொரு கொலையும் நடந்துள்ளன.

கடற்படையினரதும், துணை இராணுவக் குழுக்களினதும் இந்த மிலேச்சத்தன மான நடவடிக்கைகள் அப்பட்டமான போர் நிறுத்த மீறல் என்பதற்கு மேலாக - சர்வதேச மனித உரிமை நியமங்களை மீறும் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளும் ஆகும்.

அத்துடன், பச்சிளங் குழந்தைகளைக் குடும்பத்துடன் சேர்த்து பரிதவிக்க கொன்றமையானது - ஐ.நாவின் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் உரிமை சாசனங்களை குழிதோண்டிப் புதைக்கும் ஒரு செயலாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆவரங்காலைச் சேர்ந்த இராசையா புலேந்திரன் (வயது 30), அச்சுவேலி கதிரிப்பாயை சேர்ந்த பசுவலிங்கம் காண்டீபன் (வயது25) ஆகிய அப்பாவி இளைஞர்களும் இராணுவத்தின் துப்பாக்கிக்கு இரையாகியுள்ளனர்.

இவ்வாறாகக் குடாநாட்டில் பாதுகாப்புப் படையினரால் பால், வயது வேறுபாடின்றிக் குடும்பமாகவும், தனித்தும் மேற்கொள்ளப்படும் படுகொலைகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் செல்கிறது.

கடந்த ஜெனிவா பேச்சுக்களின் பின்னர் 12.04.2006 இல் இருந்து, இன்று வரையும் குடாநாட்டில் 60 அப்பாவிப் பொது மக்கள் படையினராலும், துணை குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வட-கிழக்கில் 175 பேர்கள்.

இது தமிழின அழிப்பின் ஒரு வடிவம். இந்தப் படுகொலைகள் தொடர்பாக கொலையுண்டவர்களின் உறவினர்களும், காயமடைந்தோரும், நாங்களும் போதிய ஆதாரங்களையும், சாட்சிகளையும் கண்காணிப்புக் குழுவுக்கு சமர்ப்பித்திருந்தும், படுகொலைகளுக்குப் படையினரும், துணை ஆயுதக்குழுக்களுமே பொறுப்பானவர்கள் என்ற உண்மையை அவர்கள் இன்று வரையும் உரிய முறையில் பகிரங்கமாக வெளிப்படுத்தாத காரணத்தால் தொடர்ந்தும் படையினர் இவ்வாறான படுகொலைகளைப் புரிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

எனவே இதனைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவதுடன், உரிய நடவடிக்கை எடுப்பதன்மூலம் இந்தப் படுகொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று தங்களை கேட்டுக் கொள்கிறோம் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரீட்சை கடமைகளில் ஈடுபடுபவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## பிரதிப் பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுபவர்கள் அர்ப்பணிப்போடு கூடிய கடமை உணர்வுடன் ஈடுபடவேண்டும் எனப் பரீட்சைத் திணைக்களத்தின் பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் தெரிவித்தார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் க.பொ.த உயர்தர பரீட்சை கடமைகளில் ஈடுபடும் மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதிப்பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது -

க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பாக சர்வதேச ரீதியிலும் இலங்கையில் மிக உயர்வான நிலை காணப்படுகிறது. அந்த உயர் அந்தஸ்தை எந்தவிதத்திலும் குறைவடையாமல் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்போடு கூடிய கடமை உணர்வு அவசியமாகும்.

மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கும் கருவியாக பரீட்சைகள் அமைகின்றன. க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பாக உள்ள உயர்வான மதிப்பை மேலும் வலுவுடையதாகப் பேணுவதற்கு பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுபவர்கள் தமது பங்களிப்பை அர்ப்பணிப்போடு வழங்க வேண்டும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பாகவுள்ள நிலைப்பாட்டில் எந்தவிதமான குறைபாடும் ஏற்படக் கூடாது என்பதைப் பரீட்சைத் திணைக்களத்தின் சகல பணிகளும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த வகையில்தான் 2005 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் கணிப் பதிவில் ஏற்பட்ட தவறுகளை மூடிமறைக்காமல் பொறுப்புணர்வுடன் திருத்தி பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படக்கூடாது. அவர்களுக்குத் திருத்தமான பெறுபேறுகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இதனையே மாணவர்களும், பெற்றோர்களும், சமூகமும் எதிர் பார்த்துள்ளது. இந்த நம்பிக்கைக்கு எந்தவிதமான பங்கமும் ஏற்பட்டு விடக்கூடாது.

பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுபவர்கள் அர்ப்பணிப்போடு தமது கடமையை உரியமுறையில் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யமுடியாது என நினைப்பவர்கள் தாங்களாகவே பரீட்சைக் கடமைகளில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

பரீட்சை தொடர்பான பணிகளில் ஏற்படுகின்ற தவறுகளுக்குக் காரணம் கற்பிக்க முடியாது. இவ்வாறு தவறு விடுபவர்கள் பரீட்சைக் கடமைகளில் இருந்து விலக்கப்படுவதோடு, அவர்கள் தமது தொழிலில் இருந்தும் விலக வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மட்டுப்படுத்தப்பட்ட ஆலய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் தற்போது இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளதால் ஆலய உற்சவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகள் யாவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ்.குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக பொதுமக்களும் வீதிகளில் நடமாடப் பெரிதும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

தற்போது குடாநாட்டு ஆலயங்களில் வருடாந்த திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள், சங்காபிஷேகங்கள் மற்றும் விசேட நிகழ்வுகள் இடம்பெறும் காலமாகும்.

## படைத்தளங்களிலிருந்து தொடரணி புறப்படும்போது போக்குவரத்தை முடக்கும் இராணுவத்தினர்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகளில் இராணுவ வாகனத் தொடரணிப்போக்குவரத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமையால் பொதுமக்கள் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

இராணுவ வாகனத் தொடரணிகள் பயணஞ் செய்யும் போது பொதுமக்கள் நீண்டநேரம் வீதியோரங்களில் நிறுத்திவைக்கப்படுகின்றனர்.

ஆரம்ப காலத்தில் இராணுவ வாகனத் தொடரணிகள் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் வரும் போதே பொதுமக்களின் போக்குவரத்துக்கள் நிறுத்தி வைக்கப்படும்.

ஆனால், அண்மைக்காலமாக பலமைல்களுக்கு அப்பால் இராணுவ வாகனங்கள் வரும் போதோ அல்லது படைத்தளங்களில் இருந்து புறப்படும் போதோ தொடரணிகள் வரும் செய்தியை அறிந்து கொள்ளும் இராணுவத்தினர் பொதுமக்களின் போக்குவரத்துக்களை வீதியோரத்தில் நீண்டநேரம் நிறுத்திவைத்து வருகின்றனர்.

இதனால் போக்குவரத்துச் செய்வோரும் பஸ்களில் பயணிப்போரும் நேரகாலத்துடன் தங்கள் கடமைகளைச் செய்ய முடியாது வீதியில் நின்று அங்கலாய்ப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை - ஏ9 வீதியினும் இராணுவ வாகனங்களின் போக்குவரத்துக்களும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


யாழ்ப்பாணம் மனோகரா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
S.J.சூர்யா - நயன்தாரா
நடித்த
கள்வனின் காதலி
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30


## அவசர கூட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அவசர கூட்டம் நாளை காலை 10 மணிக்கு இணைய அலுவலகத்தில் தலைவர் வி.கே.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தல் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலவரம் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதால், அங்கத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ள இணையச் செயலாளர் வி.சிறிசக்திவேல் கேட்டுள்ளார்.

## மந்துவிலில் காணமற்போன எட்டுப்பேரின் நிலைகுறித்து இன்றுவரை தெரியவில்லை

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி மந்துவில் கீழக்காய் அம்மன் கோவில் பகுதியில் கடந்த 06 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ள 08 இளைஞர்களின் நிலைகுறித்து இன்றுவரை எதுவும் தெரியவில்லை என அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

கீழக்காய் அம்மன் கோவிலில்- கோவில் பணிக்காக கடந்த 06 ஆம் திகதி இரவு தங்கியிருநத 08 இளைஞர்கள் காணாமல் போயிருந்தனர்.

இந்த நிலையில் காணாமற்போய் 10 நாட்களுக்கு மேலாகிய நிலையில் அவர்கள் பற்றிய எந்த விதமான தகவலும் கிடைக்கப்பெறாத நிலையில் அவர்களின் உறவினர்கள் பெரும் சோகத்துடனேயே காலத்தைக் கழித்து வருகின்றனர்.

எனினும், கோயில் பகுதியில் காணப்பட்ட பல்வேறு தடயங்கள் மூலமும் அந்தப் பகுதியில் காணப்பட்ட இராணுவ நடமாட்டங்களை வைத்து 08 இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் மந்துவில் கிராம மக்கள் அஞ்சுகின்றனர்.

எனினும், அவர்களது சடலங்களும் மீட்கப்படாத நிலையில் அந்தப் பிரதேச மக்கள் பெரிதும் பதற்றத்துடனேயே காணப்படுகின்றனர்.

எனவே, தங்களது பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் என்ன நடந்தது என்பது பற்றி சம்பந்தப்பட்ட மனித உரிமை பேணும் அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தப்பகுதி மக்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வற்வரி சந்தேகநபர்களுக்கு விளக்க மறியல் நீடிப்பு!

கொழும்பு —

வற்வரி மோசடி வழக்கில் கைதான 7 சந்தேக நபர்களின் விளக்கமறியல் இந்த மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிபதி நமல் பண்டார பலலைவிடம் 7 சந்தேக நபர்களும் கடந்த புதன்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்ட னர்.

2ஆவது சந்தேக நபரான ஆனந்த விக்கிரமசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.எல்.எம். அமீன், ஆனந்த விக்கிரமசிங்கவுக்கு மாரடைப்பு உள்ளதால் அவர் சிகிச்சை பெற்றிருந்தார்.

இருப்பினும் அவரையும் நீதிமன்றுக்கு அழைத்து வந்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

அவருக்கான உரிய உணவு மற்றும் மருத்துவ வசதிகளை வழங்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். ஆனால், தனக்கு அத்தகைய அதிகாரம் இல்லை என்று கூறி அந்தக் கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்.

அண்மையில் கணக்காய்வாளர் தாக்கல் செய்திருந்த வருவாய்த் திணைக்களம் தொடர்பான அறிக்கையின் அடிப்டையிலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக இரகசியப் பிரிவு பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தார்.

# சிறார் பாலியல் துன்புறுத்தல் பிக்குவுக்கு 10 வருட சிறை!

கொழும்பு —

சிறுவர் பாலியல் துன்புறுத்தல் வழக்கில் பௌத்த பிக்கு ஒரு வருக்கு 10 ஆண்டுகால சிறைத் தண்டனையைக் கொழும்பு நீதி மன்றம் விதித்தது.

பெபிலியன சுதந்திரதேவி ராஜகம விகாரையின் பிக்கு தலமரம்பே சுதம்மா மீது இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

கடந்த 1999 ஆம் ஆண்டு மே 27 மற்றும் செப்ரம்பர் 6 ஆம் திகதிகளில் 13 வயது சிறுவனைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாக இந்தப் பிக்குமீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

ஆனால், நீதிமன்றில் அவர் அந்தக் குற்றச்சாட்டை மறுத்தார்.

பௌத்தபிக்கு மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், அவருக்கு 10 ஆண்டுகால சிறைத் தண்டனை விதித்தும் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு 15 ஆயிரம் ரூபா நட்டஈட்டுத் தொகை வழங்கவும் கொழும்பு தலைமை நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ஏ.டி.ரட்ணநாயக்க உத்தரவிட்டார்.

# ஊரெழு, வெலிஓயாவில் கிளைமோர்கள் மீட்பு!

கொழும்பு —

ஊரெழுவிலும், வெலிஓயாவிலும் இரண்டு கிளைமோர் குண்டுகளைப் படையினர் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்ததாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.45 மணிய ளவில் ஊரெழுவில் தோட்டம் ஒன்றில் தேடுதல் நடத்திய படையினர் 10 கிலோ எடையுடைய கிளைமோர் குண்டு ஒன்றையும், 3 ஜி.80 கிரனேட்டுகளையும், வயர்த் தொகுதி ஒன்றையும் கைப்பற்றி னர்.

இந்தக் குண்டு பின்னர் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதேவேளை, வெலிஓயாவில் நெலும்வெவ-ஜனகபுர வீதியில் ரோந்து சென்ற படையினர் நேற்று முன் தினம் காலை கிளைமோர் குண்டு ஒன்றைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்ததாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# புலிகளின் கடல் இறைமை குறித்து ரணில் விளக்கமளிக்க வேண்டும்

## ஜே.வி.பி கோருகிறது

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் கடல் இறைமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விளக்கம் அளிக்க வேண்டுமென்று ஜே.வி .பி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ரணிலுக்கு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தரப்பினரில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்று.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடல்சார் உரிமை இல்லை என்று கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்தது. ஆனால், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அத்தகைய உரிமை தங்களுக்கு உண்டு என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஐக்கிய தேசியக் கட்சி தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளின் கருத்துக்கு மாறான கருத்தை ரணில் விக்கரமசிங்க வெளிப்படுத்தினால் இந்த நாட்டுக்கான நல்ல செயல் அது. ஏனெனில், விடுதலைப் புலிகளின் அறிவித்தல் இந்த நாட்டுக்கு அச்சுறுத்தலானது.

மேலும் துணைஇராணுவக் குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களையாததுதான் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக நீங்கள் அண்மையில் அமெரிக்காவில் உரையாற்றியுள்ளீர்கள்.

உங்களுடைய ஆட்சிக்காலத்தில் துணை இராணுவக் குழுவினர் எனக் கூறப்படுவோர் மீதான நடவடிக்கை என்ன? அது தொடர்பாகவும் தாங்கள் விளக்க வேண்டும்.

கருணா குழுவானது ஒரு துணை இராணுவக் குழுஅல்ல. அது அதிருப் தி குழு. விடுதலைப்புலிகளின் ஆயுதங்களையே அவர்களும் வைத்துள்ளனர். அரச படைகளுடன் இணைந்துள்ள ஈ.பி.டி.பி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்றதல்ல இது ஆகையால், கருணா குழுவை துணை இராணுவக் குழுவாக நீங்கள் குறிப்பிட்டது தவறானது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் ஸ்திரத்தன்மை இன்மையால் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் சவால்

## பந்துல குணவர்த்தன எம்.பி

கொழும்பு —

அரசியல் ஸ்திரத்தன்மை இன்மையால் பொருளாதார முன்னேற்றத்துக்கு பெரும் சவாலாக உள்ளதாக ஐ.தே.கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி நிதியமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

நாடு போர்ச் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதால் பொருளாதார கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளதுடன், சுற்றுலாத்துறை, முதலீட்டுத்துறை என்பனவும் கீழ் நோக்கிச் செல்கின்றன. எனவே, அரசாங்கம் உடனடியாகச் சமாதானப் பேச்சை ஆரம்பித்து அமைதிச் சூழலை ஏற்படுத்தாவிடின், நாட்டின் பொருளாதார செயற்பாடுகள் கேள்விக்குறியாகிவிடும்.

கடந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் பொருளாதாரம் உண்மையான நிலையை வெளிக்காட்டவில்லை. தொடர்ந்து புதிய பணம் அச்சடிக்கப்பட்டது. வாழ்க்கைச் செலவு பல மடங்காக உயர்ந்தது. பணவீக்க வீதம் இரட்டை இலக்கத்தை அடைந்தது. ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்தே சென்றுள்ளது. டொலர், பவுண், டொச் மார்க் உட்பட இந்திய ரூபாவுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டின் ரூபா வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. இது பொருளாதார முன்னேற்றத்துக்கு சாதகமாதல்ல.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிக்கும் போது அதனை எதிர்கொள்ளமுடியாமல் எரிபொருட்களின் விலைகளை அரசாங்கம் தொடர்ந்து அதிகரித்து வந்து, ஐ.தே.கட்சி ஆட்சி கவிழ்க்கப்படும் போது, ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 53 ரூபாவாக இருந்தது. கடந்த இரண்டு வருடங்களுக்குள் இது 88 ரூபாவாக உயர்ந்துள்ளது. அதுமட்டுமன்றி, அனைத்து வித எரிபொருட்களினதும் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இது பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடுகளுக்கு பாதகமாக அமைவதுடன், சாதகமான குறிகாட்டிகளையும் முடக்கிவிடும்.

நாட்டின் பொருளாதாரம் தற்போது 2001 ஆம் ஆண்டு மறைபெறுமான பொருளாதார வளர்ச்சி வீத நிலைக்கு மீண்டும் சென்று கொண்டிருக்கிறது. 2001ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் - 1.3 என்ற மறைபெறுமானத்தில் இருந்து, அதனை 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் நேர்பெறுமானத்துக்கு கொண்டு வந்தது.

ஆனால், தற்போது நிலைமை மாற்றமடைந்து வருகிறது. சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைந்து வருகிறது. நாட்டில் அமைதியற்ற சூழல் நிலவுவதால், வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைந்துள்ளன.

அத்துடன், வேலையின்மை வீதமும் அதிகரித்து வருகிறது. தற்போது தனியார் துறையில் 60 லட்சம் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். தனியார் துறையிலேயே அதிகமான தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.

ஆனால், தற்போது நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலை காரணமாகத் தனியார் நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. இது பொருளாதார வளர்ச்சி வீதத்துக்குப் பாதகமாகவே அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அடையாள அட்டை கட்டாயமில்லை

கொழும்பு —

~~கல்விப் பொதுத் தராதர உயர்தரப்~~ பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டை வைத்திருப்பது கட்டாயம் எனக் கொண்டுவரப்பட்ட நடைமுறை தற்போது பரீட்சைகள் திணைக்களத்தால் நீக்கப்பட்டுள்ளது.

பரீட்சையின்போது இடம்பெறும் மோசடிகளைத் தவிர்க்கும் நோக்கில் தேசிய அடையாள அட்டை கட்டாயப் படுத்தப்பட்டபோதும் - நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாகப் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தபால் திணைக்களத்தால் வழங்கப்படும் அடையாள அட்டை , கடவுச்சீட்டு, அதிபர் - கிராம அலுவலர் - பிரதேச செயலர் - வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படத்துடனும் பரீட்சைக்குத் தோற்றமுடியும் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களம் தேசிய அடையாள அட்டை இல்லாத பரீட்சார்த்திகளுக்கு அனுமதிப்பத்திரம் எதையும் வழங்கக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கவில்லை.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் அதிபர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகளுக்கான ஆதரவை ஐ.தே.க விலக்குவதான முடிவுக்கு சுதந்திரக் கட்சி கடும் கண்டனம்

கொழும்பு —

அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளுக்கான 'ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்தமைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் -

அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாக ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறியுள்ளமையானது - அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பொறுப்பான கருத்து அல்ல.

எந்த ஒரு கட்சி உறுப்பினரும் எந்த ஒரு கட்சியிலிருந்தும் விலகலாம். அது உள் கட்சி பிரச்சினை. கட்சி உறுப்பினர்கள் விலகினால் அதற்கு ஐ.தே.க. தான் முகங்கொடுக்க வேண்டும்.

அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் சிறுபிள்ளைத்தனமான அறிக்கைகளை வெளியிடக்கூடாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிச் சூடு பெண் ஒருவர் பலி இருவர் படுகாயம்

கொழும்பு —

புத்தளம், குருநாகல் வீதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண்ணொரு வர் உயிரிழந்ததுடன் மேலும், இருவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஹெரியட் நோனா (வயது 51) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

பிரதி அமைச்சர் காமினி தஸநாயக்கவின் வீட்டில் காவல் கடமையிலிருந்த பொலிஸாரின் துப்பாக்கியே இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பியை வெளியேற்ற கோருகிறார் ஹக்கீம்



கொழும்பு —

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி.யை வெளியேற்ற வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஹக்கீம் அண்மையில் கூறியிருப்பதாவது -

நாட்டில் அமைதியை ஏற்படுத்த முஸ்லிம் காங்கிரஸ் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்யத் தயாராகவுள்ளது.

அனைத்துக் கட்சியினரையும் இணைத்து தேசிய அரசாங்கம் அமைக்கும் ஜனாதிபதி மகிந்தவின் முயற்சிக்கு ஜே.வி.பி தடையாக உள்ளது.

ஜே.வி.பியை மகிந்த ராஜபக்ஷ தனது கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

அரசாங்கம் அமைதியை உருவாக்குவதாகக் கூறுகிறது. ஆனால், போர் ஏற்கனவே தொடங்கிவிட்டது.

எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியும் இணைந்து செயற்பட எம்மை அழைக்கின்றன. ஆனால், நாம் அவர்களுடன் இணையமாட்டோம்.

அக்கரைப்பற்றில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள போதும் நாம் பொறுமை காக்கிறோம். பதிலடி கொடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

# படையினரின் படுகொலைகள் குறித்து ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய புலிகள் முடிவு

கொழும்பு —

படையினர் மேற்கொண்டுவரும் படுகொலைகள் குறித்து ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்திடம் முறைப்பாடு செய்ய விடுதலைப் புலிகள் முடிவு செய்திருப்பதாகக் கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

படையினரால் படுகொலை செய்யப்பட்ட பிஞ்சுக் குழந்தைகள், பொது மக்கள் ஆகியோரது விபரங்களும், புகைப்படங்களும் அந்த முறைப்பாட்டில் இணைக்கப்படவுள்ளன.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டம் ஜூனில் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. தமிழ் அமைப்புகளின் பெயரால் இந்த முறைப்பாடு கையளிக்கப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக்குழுவில் இலங்கையும் அண்மையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தூய நல்லின விதைத் திட்டம் முல்லை மாவட்டத்தில் நடைமுறை

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2006 சிறுபோகத்தில் தூயநல்லின விதை உற்பத்தித்திட்டத்தை மேற்கொள்வதற்காக கிராமிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாய திணைக்களமும் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கடந்த 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் விதை உற்பத்திக்கென தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்திலும்.

இதே நாள் குமுளமுனை முள்ளியவளை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு முள்ளியவளை பசுமைப் புரட்சிக்கான ஓ.ஜி.ஆர் நிறுவனத்திலும், 16 ஆம் திகதி துணுக்காய், பாண்டியன்குளம், மல்லாவி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மல்லாவி பிரதேசத்தில் அமைந்துள்ள விவசாய விரிவாக்க சேவை நிலையத்திலும் இவர்களுக்கான ஊக்குவிப்புப் பணத்தை குறைந்த வட்டியில் வழங்கி விதை உற்பத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் - தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா, கிராமிய அபிவிருத்தி வங்கிப்பணிப்பாளர் ப.சுயன் மற்றும் விவசாய திணைக்கள விவசாய போதனாசிரியர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டப் பொறுப்பாளர் க.சங்கர், மாவட்ட இணைப்பாளர், பிரதேச இணைப்பாளர்கள், கமநல அபிவிருத்தி நிலைய பெரும் போக உத்தியோகத்தர் க.மகாதேவராஜா மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துறை சார்ந்தவர்களும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டமானது அரசாங்கம் தமிழ் மக்கள் மீது போரைத் தொடுத்து பொருளாதாரத் தடையை விதித்தாலும், எமது விவசாயிகள் நல்லின விதைப் பொருளை எமது தாயகப் பகுதியில் உற்பத்தி செய்து, எமது பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்தனர். (கு)





கெயார் நிறுவனம் வவுனியா மாவட்டத்தில் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான நாடகப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா மூத்தையா மண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் கலந்து கொண்ட நிர்வாகி அலைன், வவுனியா கோட்டக் கல்வி அதிகாரி எஸ். இராஜரட்ணம், வவுனியா இலங்கை வங்கி முகாமையாளர் ஹெனிங்ரன் ஆகியோரை முதற் படத்திலும், கெயார் நிர்வாகி கே.வி.சாகினி பெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களை பரிசுகளையும் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்
(03)

# பொது விளையாட்டு மைதான திறந்த வெளியரங்கு திறப்பு

வட்டக்கச்சி —

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட யோகபுரம் மத்தி பொது விளையாட்டு மைதான திறந்த வெளியரங்கு திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் துணுக்காய் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் கு.விக்ரர் ஜெயசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நிகொட் மற்றும் பிரதேசசபை நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த வெளியரங்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், துணுக்காய்ப் பிரதேச செயலாளர் நா.நந்தகுமார், முல்லைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஈ.தயாரூபன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஆகியோர் வழங்க - சிறப்புரையை துணுக்காய் [illegible] அரசியற்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகளில் மல்லாவி நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் நாட்டிய நிகழ்வுடன், அனிஞ்சியன்குளம் பாடசாலை மாணவிகளின் கவிதை, நடனங்கள், மல்லாவி இசைத்தென்றல் கலைஞர்களின் இசை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (09)

# அதிகரிக்கும் நீர் வெறுப்பு நோயை கட்டுப்படுத்தும் மாதம் பிரகடனம்

கிளிநொச்சி

அதிகரித்து வரும் நீர் வெறுப்பு நோயை (விசர் நாய்கடி) தடுக்கும் நடவடிக்கைக்கான செயற்பாடாக ஜூன் மாதம் நீர் வெறுப்பு நோய்த் தடுப்பு மாதமாக பிரகடனம் செய்யப்படுவதாகத் தமிழீழ சுகாதார சேவைகள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நீர் வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தின் முதற்கட்டமாகத் தமிழீழ சுகாதார சேவை பிரிவால் சிறப்புக் கருத்தரங்கொன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

இதில் தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி ஓவியன், துணைப் பொறுப் பாளர் வைத்திய கலாநிதி கலை, பணிப்பாளர் வைத்திய கலாநிதி வாமன் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, கிளிநொச்சி மாவட்ட தாய், சேய் மருத்துவ அதிகாரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேசசபை செயலாளர், தமிழீழ சுகாதார சேவைகள் இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அடிப்படை வசதிகளற்று இயங்கும் முழங்காவில் மகா வித்தியாலயம்



கிளிநொச்சி —

கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் இயங்கி வருகிறது.

ஏ.பி தரத்திலான அந்தப் பாடசாலையில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் இந்தப் பாடசாலையில் குறிப்பிட்ட பாடங்களில் கல்வி பயிலக் கூடிய மாணவர்கள் சராசரி 20 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து பூநகரி, மல்லாவி உட்பட்ட பாடசாலைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது.

2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்ட காலத்தில் இருந்து, [illegible]று வரையில் எந்தவித அபிவிருத்தி நடவடிக்கை யும் இந்தப் பாடசாலையில் மேற் கொள்ளப்படவில்லை என்று பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

பாடசாலை நிரந்தர அதிபர் இல்லாத நிலையிலேயே பாடசாலை இயங்குகின்றது.

உயர்தரத்தின் புவியியல், இந்து நாகரிகம், அளவையியல், நடனம், விவசாயம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் எவரும் இல்லை.

தளபாட வசதிகள் போதியளவு இல்லை. நுண்கலை அறைவசதி இன்மை என்பவற்றுடன் இதுவரையில் எந்த ஒரு மாணவருக்கும் கணினி பற்றிய வகுப்புக்கள் எதுவும் இது வரையில் முன்னெடுகக்கப்படவில்லை.

விளையாட்டு மைதானம் உள்ள போதிலும் இதுவரையில் எந்த உபகரணங்களும் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (கு)

# முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டில் சேமிப்பு உண்டியல் வழங்கல்

வட்டக்கச்சி —

முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டை முன்னிட்டு புதுக்குடியிருப்பு எட்டாம் வட்டாரத்தில் அமைந்துள்ள திருமுகபுரம் முன்பள்ளியில் 52 சிறார்களுக்குச் சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் சேமிப்பு உண்டியல்கள் வழங்கலும், பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தூட்டலும் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் நிதியுதவியுடன் புதுக்குடியிருப்புப் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும், முல்லை. வடக்கு - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து இதனை வழங்கின.

இதில் முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டு தொடர்பான பெற்றோர் விழிப்புணர்வு, சிறுவர் கல்வி பற்றிய கருத்துரைகளை முன்பள்ளி கல்வி மேம்பாடு நிலையத்தின் முல்லை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.ஜெயசபாபதி, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய முல்லை மாவட்ட இணைப்பாளர் து.கலைவாணி, புதுக்குடியிருப்புப் பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டளனர். (09)

# முல்லைத்தீவில் சமகால அரசியல் கருத்தரங்குகள்

முல்லைத்தீவு —

முல்லை கல்விச் சமூகத்தினருக்கான சமகால அரசியல் கலந்துரையாடல் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு முல்லை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அருணாசலம் தலைமையில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் கருத்துரைகளை - கடற்புலிகளின் தளபதிகளான க.விநாயகம், முல்லை நகரத்தளபதி க.தினேஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் சம கால அரசியல் நிலவரம் தொடர்பாக கல்விசார் சமூகம் எவ்வாறு செயற்படவேண்டும் எனக் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பிற்பகல் 3மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கான சமகால அரசியல் கருத்தூட்டல் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் தலைமையில் ஆரம்பமானது.

இதில் முல்லை நகர கடற்புலிகளின் தளபதி தினேஸ், கடற்தொழிலாளர் சங்க மேலாளர் மோகன், செய்தியாளர் சைலா, முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் சங்க தலைவர் அ.மரியராசா ஆகியோர் கருத்துரைகளை வழங்கியதுடன், சமாசப் பணியாளர்கள் இன்றைய சூழ்நிலையில் எவ்வாறு செயற்பட வேண்டும் எனவும் கருத்துரைகள் வழங்கப்பட்டன. (கு)

# குடிசன மதிப்பு

கிளிநொச்சி —

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழீழ நிர்வாக சேவையின் புள்ளி விபரக் கிளையினர் குடிசன தொகை மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களை ஒத்துழைப்பு நல்கி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# பிணை வழங்குமாறு கோரி சிறைக்கைதிகள் போராட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ்.சிறைச்சாலையில் உள்ள 15 இற்கும் மேற்பட்ட கைதிகள் தமக்குப் பிணை வழங்குமாறுகோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நேற்றுமுன் தினம் காலை ஆரம்பமானது.

யாழ்.சிறைச்சாலையில் சிறு குற்றங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்ட கைதிகளே தமக்குப் பிணை வழங்குமாறு கோரிக்கை விடுத்து உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து நேற்றுமுன் தினம் காலை 8.30 மணிக்கு யாழ். சிறைச்சாலைக்குச் சென்ற யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் கைதிகளின் கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்தார்.

கைதிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக யாழ். மாவட்ட நீதிவான் விக்னராஜா, மல்லாகம் நீதிவான் சரோஜினி இளங்கோவன், பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் ஆகியோர் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளின் போராட்டம் தொடர்பாக ஆராய்ந்ததுடன் - கைதிகளின் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து கைதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கொக்குவிலில் துப்பாக்கிச்சூடு பொதுமக்களிடையே பதற்றம்!

யாழ்ப்பாணம் —

கொக்குவில் பொற்பதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் வேளை இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தால் பொதுமக்களிடையே பெரும் பதற்றம் நிலவியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்று முன்தினம் நண்பகல்வேளை கொக்குவில் பொற்பதிப் பகுதியில் தாழ்வாக இராணுவத்தினரின் ஹெலிகொப்டர் பறந்தவேளை தொடர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து வீடுகளிலும், வீதிகளிலும் நின்றவர்கள் ஹெலி சுடுவதாக நினைத்துச் சிதறி ஓடி, பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றதோடு நிலத்திலும் விழுந்து படுத்தனர்.

இதனால் அந்தப் பிரதேசத்தில் நீண்டநேரமாக பெரும் பதற்றம் நிலவியதோடு பொதுமக்களும் வீடுகளுக்குள்ளேயே முடங்கினர்.

ஆனாலும் இனந்தெரியாத நபர்களே ஹெலிகொப்டரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இருபது வருட காலத்தின் பின்னர் மூளாய் வைத்தியசாலையில் பிரசவம்

சங்கானை —

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் 20 வருட காலத்தின் பின் இரண்டு மகப்பேற்று பிரசவங்கள் இடம்பெற்றன. இந்தப் பிரசவங்களை மகப்பேற்று சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சுரேஸ் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நீண்டகாலத்தின் பின் இரண்டு நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டு, தனது வைத்திய சேவையில் தீவிரமான முன்னேற்றத்தை இந்த வைத்தியசாலை கொண்டுள்ளதால், சகல விதமான நோய்களுக்குள்ளானவர்களும், இந்த வைத்தியசாலையில் எந்த நேரத்திலும் தமக்குரிய சிகிச்சைகளை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் சபை தெரிவித்துள்ளது. (48)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது பாடசாலை அதிபர் இ.ராகவன் உரையாற்றுவதையும் அருகில் கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி அம்பலவாணர், கரவெட்டி அம்பம் மத்திய மருந்தக அபிவிருத்தி குழுத் தலைவர் உபாலி பொன்னம்பலம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (12)

# மானிப்பாயில் மருந்தகம் மகப்பேற்று விடுதி அமைப்பு

யாழ்ப்பாணம் —

மானிப்பாயில் மத்திய மருந்தகமும் மகப்பேற்று விடுதியும் முழுமையாக அமைக்கப்படும் என யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் ஜெய்க்கா நிறுவன நிதியுதவியுடன் மானிப்பாயில் மத்திய மருந்தகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, மகப்பேற்றுமனை முழுமையாக அமைப்பதற்கான முன்மொழிவுகள் ஏற்கனவே நிகொட் நிறுவனத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# எரிபொருள் விலை உயர்வடைந்தாலும் யாழ். விமானக் கட்டணம் அதிகரிக்காது

## ஏரோ லங்கா முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டபோதிலும் -யாழ்,கொழும்புக்கான விமான சேவைக் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாதென ஏரோ லங்கா சேவை முகாமையாளர் விக்ரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

எரிபொருட்களின் விலையேற்றத்தால் விமானப் பிரயாணச் செலவும் அதிகரித்துள்ளது. ஒருமுறை யாழ்ப்பாணம் செல்வதற்கு 200 அமெரிக்க டொலர் செலவானது. ஆனால் எரிபொருள் விலையேற்றப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்துக்கு ஒரு தனிப் பயணத்துக்கு 1450 டொலர் செலவாகின்றது.

எனவே, இந்தச் செலவை ஈடுசெய்வதற்கு விமானக் கட்டணத்தை அதிகரிக்கலாம். எனினும் அது தற்போது சாத்தியமில்லை. ஏனெனில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்வோர் தொகை கடந்த சில வாரங்களாகக் குறைவடைந்துள்ளது.

மிக முக்கியமான மரணம் மற்றும் கடும் சுகவீனம் போன்ற காரணங்களுக்காகவே விமானத்தில் செல்கின்றனர். எனவே, உடனடியாக விமானக் கட்டணத்தை உயர்த்தமுடியாத நிலைமை காணப்படுகிறது.

இலங்கையில் இரண்டு உள்ளூர் விமான சேவை நிறுவனங்கள் உள்ளன. ஏரோ லங்கா, எக்ஸ்போ ஏவியேசன் என்பவையே அவையாகும். இந்த இரண்டு நிறுவனங்களும் யாழ்ப்பாணத்துக்கான விமான சேவைகளை நடத்துகின்றன.

விமானத்தில் 48 ஆசனங்களே உள்ளன. 41 பயணிகள் இருந்தால் விமானச் செலவை ஈடுசெய்யலாம். 38 பயணிகள் இருந்தால் விமான சேவை நடைபெறும். மாலைநேர விமானசேவையை ரத்துச் செய்ய முயற்சி செய்தோம். எனினும் போதியளவு பயணிகள் வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். பருத்தித்துறையிடையே நான்கு இடங்களில் சோதனைகள்

வடமராட்சி —

பருத்தித்துறை - யாழ்ப்பாணத்துக்கிடையிலான போக்குவரத்தில் இராணுவச் சோதனைகள் அதிகரித்துள்ளமையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பருத்தித்துறையிலிருந்து - யாழ்ப்பாணத்தை நோக்கி வரும் பயணிகள் பஸ்களை நான்கு இடங்களில் வழிமறித்து இராணுவத்தினர் சோதனைக்குட்படுத்தி வருகின்றனர்.

வல்லைப்பகுதியில் இரு இடங்களிலும், ஆவரங்கால் சந்தி மற்றும் இருபாலைச்சந்தி ஆகியவற்றில் பயணிகள் பஸ்கள் உட்பட அனைத்து வாகனங்களையும் மறித்து, பயணிகளை இறக்கி அடையாள அட்டை சோதனை, உடற்சோதனை, உடைமைச் சோதனை, வாகனப் பரிசோதனை என நீண்டநேரம் சோதனைகளை நடத்திய பின்னரே மேற்கொண்டு செல்ல அனுமதிக்கின்றனர்.

இதனால் நீண்டநேரம் செல்வதோடு, அவசரத் தேவைகளுக்காக வைத்தியசாலை வருவோரும். வயோதிபர்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெங்காய வியாபாரிகள் வராததால் விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக வட பகுதியிலிருந்து விவசாயப் பொருட்களை தென்பகுதிக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் இந்த முறை வெங்காயச் செய்கையில் அதிகளவானோர் ஈடுபட்டதன் விளைவாக, வெங்காய அறுவடை நன்றாகவே இருந்தது.

இருப்பினும் தென்பகுதி வியாபாரிகள் இந்த முறை வெங்காயத்தைக் கொள்வனவு செய்வதற்கு யாழ்ப்பாணத்துக்கு வர அச்சம் தெரிவிப்பதால், வெங்காயச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இந்த காலப் பகுதியில் வெங்காயம் அதிகளவில் விற்கப்பட்டபோதிலும், இந்த முறை நல்ல நிலையில் உள்ள வெங்காயங்களையும் குறைந்த விலைக்கு விற்க வேண்டியுள்ளதாகவும், வியாபாரிகளின் வருகை குறைவாக இருப்பதால் வெங்காயத்தை விற்பனை செய்ய முடியாதநிலை உள்ளதாகவும் வெங்காயச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

தென்பகுதி வியாபாரிகள் மற்றும் உள்ளூர் வியாபாரிகள் வெங்காயக் கொள்வனவில் ஈடுபடுவது குறைவாக இருப்பதால், விவசாயிகளுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளதோடு அவர்களது பொருளாதாரமும் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அசாதாரண நிலைமையால் பயிர்ச்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்குப் பின்னடித்து வருகின்றனர்.

யாழ். குடாநாட்டில் நாளாந்தம் வன்முறைச் சம்பவங்கள் அதகரித்துக் காணப்படுவதால், விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதை தவிர்த்து வருகின்றனர்.

குறிப்பாக நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய்,அச்செழு, ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி, அச்சுவேலி, ஆவரங்கால், சிறுப்பிட்டி, புத்தூர், பத்தமேனி, தம்பாலை போன்ற இடங்களில் அதிகளவில் விவசாயிகள் இருக்கின்ற போதும் இந்த முறை விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கைக் குட்படுத்தப்படாத நிலையில் உள்ளன.

விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது குறைவாகக் இருப்பதால் மரக்கறி வகைகள், வெங்காயம், கிழங்கு வகைகள் போன்ற வற்றை குடாநாட்டில் அதிக விலை கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விவசாயிகளுக்கு போதியளவு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படாமையாலும் சில விவசாயிகள் பயிர்ச்செய்கையின் அளவை குறைத்துள்ளதாக தெரியவருகிறது.

# ஸ்ரான்லி வீதியில் பட்டப் பகலில் மாயமான இலக்கத் தகடு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின்பக்க இலக்கத்தகடு இனந்தெரியாதோரால் கழற்றி எடுக் கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது -

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைச் சேர்ந்த நாகராசா வில்வராசா என்பவர் யாழ். நகரில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக தனது மோட்டார் சைக்கிளில் சென்றார்.

அதனை ஸ்ரான்லி வீதியிலுள்ள ஓர் கடையின் முன்னால் நிறுத்தி விட்டு, அவர் பொருட்களைக் கொள்வனவு செய்து வீடு திரும்புவதற்கு மோட்டார் சைக்கிளுக்கருகில் வந்து பார்த்தபோது, பின்பக்க இலக்கத் தகடு கழற்றப்பட்டிருப்பதை கண்டார்.

பகல் ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றபோது மக்கள் நடமாட்டமும் அதிகளவில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த இலக்கத் தகட்டைப் பாவித்து, சட்டவிரோத செயல்களில் யாரும் ஈடுபட்டால் அதனால் தான் பாதிக்கப்படலாம் என மோட்டார் சைக்கிள் உரிமையாளர் தெரிவித்தார். இது பற்றி மானிப்பாய் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு ஒன்றையும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் செய்துள்ளார். (48)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : வி.விநோதன்
முகவரி : நாகர்கோவில்.

அகவை இரண்டு



பெயர் : றொ. எட்வின் றொசானி
முகவரி : சுழிபுரம்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ..........
முகவரி ..........
பிறந்த ஆண்டு ..........

புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்

# கடல் கண்காணிப்புக்கு உதவ அரசாங்கம் தயாராக உள்ளதாம்



கொழும்பு —

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் கடல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துதர அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இது தொடர்பாக கூறியதாவது -

கண்காணிப்புக் குழுவினரது தேவைகள் குறித்து அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தும்போது, அதைச் செய்து கொடுப்பதில் அரசாங்கத்துக்கு எவ்வித சிக்கலும் இல்லை.

கடற்கண்காணிப்புப் பணியை கண்காணிப்புக் குழுவினர் முற்றாக நிறுத்தவில்லை. அது தற்காலிகமான இடைநிறுத்தம் தான் என்று அரசாங்கத்திடம் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

வெற்றிலைக்கேணியில் பாரிய அசம்பாவிதம் ஒன்று விமானப் படையினரது உதவியால் தவிர்க்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அமைதி முயற்சிப் பணிகளின் போது உயிர்நீத்திருக்கும் அரச படையினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாட்டினது பாதுகாப்புக்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும். மக்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களை கேடயமாக்க முயற்சிக்கின்றனர்.

சமாதான முயற்சிகளில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்குமென நம்புகிறேன்.

இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் இந்தியா கலந்துகொள்ள மாட்டாதெனத் தெரியவருகின்றது. இந்தியாவின் இந்த முடிவால் ஆச்சரியப்படுமளவுக்கு எதுவுமில்லை. இந்தியா வழமை போன்று செயற்பட்டு வருகின்றது.

இந்தியா எமது அயல்நாடு என்ற வகையில் எமது நாட்டின் விவகாரங்களில் அதிக அக்கறை காட்டி, சமாதான விடயங்களில் இந்தியா ஒதுங்கியிருப்பது போன்று தென்பட்டாலும், இலங்கை அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குமென்ற நம்பிக்கை உண்டு.

இந்தியா இந்தமுறை இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டுக்கு ஒரு பிரதிநிதியை தகவல்கள் பெறும் நோக்கத்துக்கு அனுப்பி வைக்கும். இதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. இருப்பினும் உறுப்பு நாடாக இந்தியா கலந்து கொள்ள மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உடனிருந்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறுகையில் -

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போது படையினரை இலக்கு வைத்து கண்ணிவெடிகளை விடுதலைப் புலிகள் புதைத்து வைத்தனர்.

முச்சக்கர வாகனங்களையும், மோட்டார்சைக்கிள்களையும் கொண்டு அரச படையினர் மீது அவர்கள் தாக்குதல் நடத்துகின்றனர் எனத் தெரிவித்தார்.

# அமைதிச் சூழல் ஏற்படுவதற்கு ஐ.தே.க அரசு அமைய வேண்டும்

## என்கிறார் ராஜித சேனாரட்ண



கொழும்பு —

அமைதிச் சூழல் மீண்டும் ஏற்பட வேண்டுமெனில் ஐ.தே.கட்சி அரசாங்கமொன்று அமைய வேண்டியது அவசியமென அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷியிடம் ஜே.வி பியினர் வெளிநாட்டு உதவிகள் தேவையில்லையெனத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், நாட்டின் எதிர்கால நிலையை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. வெளிநாட்டு உதவிகளுமின்றி, யுத்தத்தின் மூலம் நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியுமானால் இலங்கை மூன்றாம் உலக நாடாக அன்றி முதலாம் உலக நாடாக இருக்க வேண்டும்.

பங்குச் சந்தையில் வீழ்ச்சி, முதலீட்டுத்துறையில் வீழ்ச்சி என நாடு வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வெளிநாட்டு உதவிகளுமின்றி, யுத்தமும் ஏற்பட்டால் நாட்டின் நிலை குறித்து பேசிப் பயனில்லை.

இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் திறமை ஐ.தே.கட்சிக்கு நன்றாகவே உள்ளது. நாட்டில் மீண்டும் அமைதியான சூழல் ஏற்பட வேண்டுமானால் ஐ.தே.கட்சியின் அரசாங்கம் அமைய வேண்டியது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு-கிழக்கு நிலைமைகளுக்கு அரசாங்கமே முழுக்காரணம்

## டொனால்ட் காம்பிடம் சுரேஷ் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு —

வடக்கு - கிழக்கில் ஏற்பட்டிருக்கும் தற்போதைய நிலைமைகளுக்கு அரசாங்கமே காரணம். அதனை சர்தேச சமூகம் இதுவரை வெளிப்படையாக கண்டிக்கவில்லையென தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் - அமெரிக்கா இராஜாங்க திணைக்கள தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவித் துணைச் செயலாளர் டொனால்ட் காம்பிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -


இரண்டாம் கட்ட ஜெனிவாப் பேச்சுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான இயல்பு நிலைமையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது.

தமிழர் பகுதியில் தினமும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கைதுகள் இடம்பெறுகின்ற போதிலும், சர்வதேச நாடுகள் அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளுக்கு வெளிப்படையாக கண்டனம் எதுவும் தெரிவிப்பதில்லை. புலிகள் ஏதாவது தாக்குதல் நடத்தினால் வெளிப்படையாகவும், காரசாரமாகவும் கண்டிக்கும் பாவி பொதுமக்கள் கொல்லப்படும் போது மட்டும் மௌனமாக இருக்கின்றன. இதனால் தமிழ் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

படையினர் மீது ஒரு கட்டத்தில் தாக்குதல் நடத்தப்படும்போது, வேறு ஒரு இடத்தில் மக்கள்மீது படையினர் தாக்குகின்றனர். இது எந்த வகையில் நியாயமானது?

இதேவேளை, ஜெனிவாப் பேச்சின்போது காணப்பட்ட இணக்கப்பாடுகள் எதனையும் அரசாங்கம் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களை களைவதற்கு மாறாக அவர்களைப் படையினர் புலிகளுக்கு எதிராகவும் பயன்படுத்துகின்றனர்.

போர் நிறுத்த உடன்படிக்கையை சீர்குலைத்து, சட்டத்துக்கு முரணான கொலைகளை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ளது.



சர்வதேச நாடுகள் இதனை கவனத்தில் கொண்டு ஜனாதிபதியிடம் இரகசியமாக கண்டிக்காமல், வெளிப்படையாக கண்டிக்கவேண்டும். அப்போதுதான் அரசாங்கம் இந்தப் படுகொலைகளை நிறுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 15 ஆயிரம் பேரை கொண்ட மக்கள் படை அமைப்பு

கொழும்பு —

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கு உதவும் வகையில் கேகாலை மாவட்டத்தில் 15 ஆயிரம் பேரை கொண்ட மக்கள் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வில்பர்ட் மகாநாயக்க தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு மற்றும் ஏனைய திடீர் அனர்த்தங்களின் போது படையினருக்கு இந்தப் படையினர் உதவி வழங்குவர் எனவும் அவர் கூறினார்.

தேவைப்படும் பட்சத்தில் இந்த படையினரின் எண்ணிக்கையை ஒரு லட்சம் வரை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கேகாலை ரம்புக்கனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார். (01)

# திருமலையில் கைதான குடும்பஸ்தர் பயங்கரவாதத் தடுப்புக் காவலில்!

திருகோணமலை —

திருகோணமலை அன்பு வழிபுரத்தில் வைத்து கடந்த மாதம் 27 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட அருளானந்தம் விஜயகுமார் (வயது 45) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு கொண்டுசெல்லப்பட்டார்.

திருகோணமலை அன்புவழிபுரத்தில் தேடுதல் நடத்திய படையினர் சந்தேகத்தின் பெயரில் அவரைக் கைது செய்து கடந்த மாதம் 5 ஆம் திகதி கொழும்பு பயங்கரவாத தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

இந்த நபருடைய கைது தொடர்பாக உறவினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தனிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக செயற்படுத்துக

## இந்தியா அறிவுறுத்து

கொழும்பு —

போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகச் செயற்படுத்தி, நாட்டை இன்னொரு போருக்கு செல்ல விடாமல் தடுக்குமாறு மங்களவுக்கு இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

அண்மையில் இந்தியா சென்றிருந்த வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பொறுப்பதிகாரி மோகன் குமார் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கமானது கூட்டாட்சி முறையில் தீர்வுகாண முடிவு செய்திருப்பதாகவும் ஜே.வி.பி யினரும் இதற்கு ஆதரவளித்துள்ளதாகவும் மங்கள சமரவீர அவர்களிடம் தெரிவித்தார்.

மேலும், போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கம் விலகாது என்றும் இந்தியத் தரப்பினருக்கு மங்கள உறுதியளித்துள்ளார்.

வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்களினது பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும் என்றும் தமிழர்களுக்கான மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மங்களவின் இந்தியப் பயணத்துக்கு முன்னதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவை மங்கள சமரவீர சந்தித்துப் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நான்காம் கட்ட ஈழப்போரை யுத்தம் மூலமே முறியடிக்கலாம்

## என்கிறார் விமல் வீரவன்ச



கொழும்பு —

விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ள நான்காம் கட்ட ஈழப் போரை முறியடிப்பதற்கு யுத்தமே ஒரே வழியாகும். இதற்கு இன, மத பேதமின்றி உலகமும் ஒன்றுபட வேண்டுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பாக இவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஒரு இலக்கை முன்வைத்தே புலிகள் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் தற்போது சமாதானப் பேச்செனில் சூடான் நாட்டு முடிவையும், போரென்றால் சைப்ரஸ் நாட்டு முடிவையும் இலக்காகக் கொண்டு செயற்படுகின்றனர்.

சூடானில் மேற்கு நாடுகளின் தலையீட்டால் பேச்சுக்கள் மூலம் நாடு இரண்டாக்கப்பட்டது. சைப்ரஸில் பிரிவினைவாதிகளை சமாளிக்க முடியாத அரசு - சர்வதேச உதவிகளை நாடியது. இதில் தலையிட்ட சர்வதேச சமூகம் ஐ.நா.படையை சைப்ரஸுக்கு அனுப்பிவைத்தது. இன்று இங்கு ஒரு பக்கம் அரசு, மறு பக்கம் பிரிவினைவாதிகள், நடுவில் ஐ.நா.படைகள் இலங்கையிலும் இந்த நிலையைத் தோற்றுவிக்கவே புலிகள் விரும்புகின்றனர்.

புலிகளுக்குச் சமாதானப் பேச்சுக்களிலோ அல்லது சமஷ்டி ஆட்சி முறையிலோ சிறிதுகூட நம்பிக்கையில்லை. ஜெனிவா உடன்படிக்கையில் துணைப்படை என்ற சொல் இடம்பெறவில்லை.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள புலிகள் மற்றும் படையினர் தவிர்ந்த ஏனைய குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படுமென்பதுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஆயுதக் குழுக்கள் பாதாள உலகக் குழுக்கள் மற்றும் திருட்டுக் கும்பல்களாகவும் இருக்கலாம்.

புலிகள் ஒரு இலக்கை நோக்கிச் செயற்பட ஆரம்பித்துள்ளனர். ஆனால், அரசு எந்தவித இலக்குமின்றிச் செயற்படுகிறது. இராணுவ ரீதியில் புலிகளைத் தோற்கடிக்கலாமென்ற இலக்கைவைத்து அரசு செயற்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.
- திருக்குறள்.

## நமது நோக்கு

# கிலி கொள்ளவைக்கும் வதந்தி

யாழ்.குடாநாடு இப்போது அச்சத்தின் பிடியில் - பீதியில் உறைந்து போயிருக்கிறது. இங்கு வாழும் ஒவ்வொருவருமே எப்போது என்ன நடக்குமோ? யாருக்கு ஏது நேருமோ? என்ற பயத்தின் நடுவில் நடைபிணமாகத்தான் வாழ்ந்து வருகின்றனர்.

குடாநாட்டில் நாளாந்தம் நடைபெறும் படுகொலைகள், இராணுவக் கெடுபிடிகளால்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏதோ நிர்ப்பந்தத்தால் காலையில் சன நடமாட்டம் இருந்தாலும், நண்பகலுக்குப் பின்னர் குறைந்து குறைந்து, 5 மணிக்குப் பின்னர் வீதிகள் வெறிச்சோடிவிடுகின்றன.

ஆறு, ஏழுமணிக்குப் பின்னர் வீடுகளுக்குள் முடங்கிவிடும் மக்கள், எங்காவது நாய் குரைத்தால் வீட்டு விளக்கையும் அணைத்துவிட்டு முழிபிதுங்கிய படி இருக்கின்றனர்.

இந்த நிலையில் குடாநாட்டு மக்கள் மத்தியில் நாளாந்தம் பரப்பப்பட்டுவரும் வதந்திகள் மக்களை மேலும் கிலிகொள்ளவைப்பதாக அமைகின்றன.

பொறுப்பற்ற வகையில் பரப்பப்பட்டுவரும் வதந்திகள், பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருவதும் கண்கூடு.

சில நாட்களுக்கு முன்னர் யாழ்.பொது விளையாட்டரங்குப் பகுதியில் - முனீஸ்வரன் கோவிலுக்கருகே 6 சடலங்கள் இருப்பதான வதந்தி தொடந்து மூன்று நாட்களாக உலாவந்தது.

எதுவுமே இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்ட போதும் - இப்போது உள்ளது, நாம் பார்த்தோம் என்றதுபோல் பலரும் கதைகளைப் பரவவிட்டனர். ஆனால், அப்படி எதுவுமே இல்லை.

இதுபோல ஒவ்வொரு இடங்களிலும் வதந்திகள் வெவ்வேறு வடிவங்களில் உலாவருகின்றன. வெட்டிக் கொலை செய்யப்பட்ட சடலங்கள் கிடப்பதாகவும், யாரேனும் ஒருவரைச் சுட்டுப்போட்டிருப்பதாகவும் கண்டபடி கதை பரவுகிறது.

இன்றைய சூழலில் வெட்டிக்கொலை, சுட்டுக் கொலை என்றால் எவருமே இலகுவாக நம்பிவிடுகின்றனர். ஏனென்றால், இதுதான் மரணங்கள் மலிந்துபோன பூமியாயிற்றே.

அதற்காக இல்லாதததையும், பொல்லாததையும் சொல்லி மக்களைப் பீதிக்குள்ளாக்குவதும் - கலக்கமடையச் செய்வதும் சரியான காரியமா?

இப்படிப்பட்ட செய்திகளைக் கேள்விப்படும் உறவினர்கள் என்னபாடுபடுவார்கள் என்பதைச் சற்றும் சிந்திக்காமல் - பெரும்பாலானோர் பொறுப்பற்று நடந்துகொள்கின்றனர்.

இப்படிப்பட்ட வதந்திகள் எமக்கே பெரும் கேட்டை விளைவிக்கும் என்பதை உணர மறந்துவிடுகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் நீதிபதி ஒருவருக்கு தொலைபேசிமூலம் ஒருவர் ஓரிடத்தில் சடலம் ஒன்று கிடப்பதாகத் தெரிவித்திருந்தார். சமூக அக்கறைகொண்ட நீதிபதி அங்கு பொலிஸாரை அனுப்பிப் பார்த்தபோது எதுவுமே இருக்கவில்லை.

இப்படிப்பட்ட சம்பவங்களின் விளைவாக எதிர்காலத்தில் நீதிபதி, அனர்த்த சம்பவங்கள் ஏற்பட்டாலும்கூட உடனடி நடவடிக்கை எடுக்க முடி யாததற்கு வருத்தம் தெரிவித்தார்.


இப்படிப்பட்ட பொறுப்பற்ற நபர்களின் வதந்திகளால் எத்தனையோபேர் பாதிக்கப்படும் நிலை உருவாகும். எனவே, எதையும் உறுதிப்படுத்திக்கொள்ளாமல், கதைப்பதைத் தவிர்த்துக்கொள்வதே நல்லது.

வதந்தியைப் பரப்புவோர் இங்கு மட்டும் தமது கைவரிசையைக் காட்டாமல், ஏககாலத்தில் கொழும்பு, வெளிநாடுகளில்கூட சொல்லிவிடுகின்றனர். இதனால் கண்காணாத இடத்திலிருப்போர் எத்தனை தவிப்பு தவிப்பார்கள் என்று இவர்களுக்குத் தெரியாது.

ஊரடங்கு, ஹர்த்தால், கொலை, சடலம் என்று பரப்பப்படும் வதந்திகளின் மூலம் மக்களைக் கிலிகொள்ளச்செய்யும் முயற்சிகளை தடுப்பதற்கு நாம் அனைவருமே எமது பங்களிப்பை செலுத்த வேண்டும். அதன்மூலம்தான் வதந்திப்பேயை விரட்டமுடியும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# அசாதாரண சூழல் காரணமாக வெளிநாட்டவர் வருகை வீழ்ச்சி

யாழ்ப்பாணம் —

குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வெளிநாட்டவர்கள் மற்றும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோரின் வருகை குறைவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் வெளிநாடுகளில் உள்ள பலரும்,யாழ்ப்பாணத்தில் இருக்கும் தமது உறவினர்களை பார்க்கவென பெருமளவில் வருகை தந்தனர். வருடத்தில் இரண்டு, மூன்று தடவைகள் கூட சிலர் வெளிநாடுகளில் இருந்து இங்கு வருகை தந்தனர். இவர்களால் முகமாலை மற்றும் ஓமந்தை சோதனைச் சாவடிகளும் நிறைந்து காணப்பட்டன. அதே போன்று வெளிமாவட்டங்களில் உள்ள பலரும் இங்கு தமது உறவினர், நண்பர்களை பார்க்கவும் வந்து போயுள்ளனர். அவர்களின் வருகையும் தற்போது குறைவடைந்துள்ளது.

அதேபோன்று வெளிநாட்டிலிருந்து தமது தொழில் நிமித்தம் குடாநாட்டுக்கு அடிக்கடி வந்து செல்லும் அரச, அரச சார்பற்ற நிறவனங்களின் பிரதிநிதிகளின் வருகையும் குறைவடைந்துள்ளது. குடாநாட்டுக்கு வரும் வெளிநாட்டு மற்றும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த உல்லாச பிரயாணிகளின் வருகையும் முற்று முழுதாக வீழ்ச்சி கண்டுள்ளது.

வெளியிடங்களை சேர்ந்தோரின் வருகை குடாநாட்டில் வீழ்ச்சி அடைந்துள்ளதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஹொட்டல்கள், உல்லாசப் பயணிகள் விடுதிகள், தங்குமிடங்கள் என்பன வெறிச்சோடிக் காணப்படுகின்றன. இதனால் தமது வருமானம் பாதிக்கப்பட்டிருப்பதாக விடுதி உரிமையாளர்கள் தெரிவித்தனர். குடாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் ஹொட்டல்கள் மீள இயங்கத் தொடங்கியமையும், அத்துடன் புதி தாக பல தங்குமிட விடுதிகளும் தோற்றம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அரசின் பிரசார முயற்சி தோல்வி!

கொழும்பு —

விடுதலைப் புலிகள் மீது சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் அண்மைக்கால வன்முறைகளுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என தமது ராஜதந்திரிகள் மூலமாக அரசு பிரசாரங்களை மேற்கொண்டு வந்த போதும் அது பயனளிக்கவில்லை என்று தெரி விக்கப்படுகின்றது.

இதையடுத்து வெளிநாட்டுக்கான ராஜதந்திரிகளை உடனடியாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயன்று வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

விடுதலைப்புலிகளின் ராஜதந்திர நடவடிக்கைகளை முறியடிக்கும் விதத்தில் தமது ராஜதந்திரிகள் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த பணித்துள்ளார்.

# செம்மணி, நாவற்குழி பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம் —

ஏ9 வீதியை அண்டிய செம்மணி வெளி, நாவற்குழி பகுதீகளில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாலை, இரவு வேளைகளில் இந்தப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அண்மை நாட்களாக அதிகரித்துள்ளதாக மக்கள் அச்சம் தெரிவித்தனர். அண்மையில் இந்த வீதியால் யாழ்.நகரிலிருந்து தென்மராட்சி பகுதி நோக்கி மோட்டார் சைக்கிள்களில் சென்று கொண்டிருந்த நபர்களை வழிமறித்த திருடர்கள் பெறுமதி வாய்ந்த நகை மற்றும் பணத்தை அபகரித்து சென்றனர். இதே போன்றதொரு சம்பவம் கடந்த வாரமும் இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் சென்று வரும் இந்த வீதியில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும் - பொலிஸார் இது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்காதிருப்பது பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சாவகச்சேரியில் மின்தடையால் மக்கள் சிரமம்

சாவகச்சேரி —

சாவகச்சேரி நகரிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் திடீர் மின் வெட்டுக்களால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பகுதிகளில் இரவு வேளைகளில் மணித்தியாலக் கணக்கில் மின்சாரம் தடைப்படுகிறது. இதன் காரணமாக மக்கள் சிரமம் அடைய நேரிடுகிறது. குறிப்பாக தற்போது உயர்தரப் பரீட்சை ஆரம்பமாக இருப்பதால் பரீட்சைக்கு படிக்கும் மாணவர்கள் இரவு வேளைகளில் கல்வி கற்க முடியாத நிலைக்கு உள்ளாகின்றனர்.

மின்சாரம் தடைப்படும் வேளைகளில் அது தொடர்பாக மின்சார சபையிடம் தொலைபேசி மூலம் மக்கள் தொடர்பு கொள்ளும் போது - உரிய பதில்கள் அளிக்கப்படுவதில்லை எனவும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு பிரதேச செயலக மென்பந்து கிரிக்கெட் முடிவு

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான மென்பந்து கிரிக்கெட் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. ஆண்களுக்கான போட்டியில் சென்.அன்ரனீஸ் கழகமும், பெண்களுக்கான போட்டியில் ஸ்ரார் கழகமும் பிரதேச சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆண்களுக்கான போட்டியில் உதய சூரியன் அணி அரையிறுதி ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் அணியுடன் மோதி இறுதிப் போட்டிக்கு தெரிவானது. அதே வேளை மற்றையஅரையிறுதிப் போட்டியில் சென்.அன்ரனீஸ் அணி பல்துறை அணியுடன் மோதி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. இறுதிப் போட்டியில் உதயசூரியன் அணியுடன் மோதி பிரதேச சம்பியனானது.

பெண்களுக்கான போட்டியில் ஸ்ரார் அணி அரையிறுதி ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் அணியுடன் மோதி வெற்றி பெற்றது. இதேவேளை மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் அணி உதயசூரியன் அணியுடன் மோதியது. இதில் உதயசூரியன் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவானது. இறுதிப் போட்டியில் மோதிய ஸ்ரார் எதிர் உதயசூரியன் அணிகளில் ஸ்ரார் அணி வெற்றிபெற்று பிரதேச சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

(113)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பஸ் நிலைய கொலைக்கு எல்லாளன் படை உரிமை!

யாழ்ப்பாணம்—

யாழ்.பஸ்நிலையப்பகுதியில்நேற்று முன்தினம் காலை சுட்டுக் கொல்லப்பட்ட காங்கேசன்துறையைச் சேர்ந்தவரும், இளவாலையில் வசித்து வந்தவருமான செல்வராசா சிறிதாஸ் என்பவரின் கொலைக்கு யாழ்.மாவட்ட எல்லாளன் படை உரிமை கோரியுள்ளது.

இதுதொடர்பாக நேற்றிரவு யாழ். மாவட்ட எல்லாளன் படை விடுத்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எதிரிகளுடனும், எதிரி புலனாய்வாளர்களுடனும் தமிழின துரோகிகளுடனும் இணைந்து செயற்பட்டுவந்தார். பலமுறை இவருக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டும் அதனை மீறி செயற்பட்டமையால் எமது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எதிரிகளுடனும், எதிரி புலனாய்வாளர்களுடனும், தமிழின துரோகிகளுடனும் தொடர்ந்து தொடர்புகளை வைத்திருப்பவர்களுக்கு இவ்வாறான தண்டனைகளே வழங்கப்படும் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பாறையில்...

பாலசுந்தரம் கமல்ராஜ் (வயது 27), சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும், நான்கு பிள்ளைகளின் தந்தையுமான பாலசுந்தரம் சுரேஸ்வரன் (வயது 32) ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை மத்திய முகாம் பொலிஸ் நிலையத்திலிருந்து இவர்களைப் பின்தொடர்ந்து மோட் டார் சைக்கிளில் வந்த துணை இராணுவ குழுவினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கமல்ராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இவருடன் சென்ற சுரேஸ்வரன் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் உயிரிழந்தார்.

இவர்கள் சென்ற மோட்டார் சைக்கிளையும், கமல்ராஜின் கையடக்கத் தொலைபேசியையும் துணை இராணுவக் குழுவினர் எடுத்துச் சென்றதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இவர்களுடன் இன்னொரு மோட்டார் சைக்கிளில் சென்ற மேலும் ஒருவர் தப்பியோடி மத்திய முகாம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உயிருக்கு உத்தரவாதம்...

சுமார் 180 குடும்பங்களின் உறுப்பினர்களும் இந்தக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அந்தக்குடும்பங்களின் அங்கத்தவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

கடந்த சனிக்கிழமை நடந்த படுகொலைகளானது எமது உயிருக்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலையில் நாம் தொடர்ந்து அல்லைப்பிட்டியில் வாழ்வதாக இருந்தால் எமது உயிருக்கு உத்தரவாதம் தரப்படவேண்டும். இதனை அரசாங்க அதிபரோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ தருவதாக இருந்தால் மட்டுமே நாம் இங்கு வாழ முடியும்.

தற்போதைய நிலையில் யாருடைய உயிருக்கும் யாரும் பாதுகாப்புத் தரக்கூடிய நிலை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து- தாங்கள் வன்னி செல்வதற்கான பாதுகாப்பை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர்.

இந்த ஏற்பாட்டைச் செய்து தரக்கூடிய நிலையில் எந்த அமைப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அப்பகுதி மக்கள் மிகுந்த ஏமாற்றத்துடன் கலைந்து சென்றனர்.

## சர்வதேச சமூகத்தின்...

இணையத் தளத்துக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது -

சர்வதேச சமூகத்திடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தும் வகையிலான தென்னிலங்கை கடும்போக்காளர்களின் இந்தக் கோரிக்கையானது - ஆயுதவழித் தீர்வை கைக்கொள்வதற்கான ஒரு முன்னோட்டமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை போரின் மூலம் தோற்கடிக்கவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் தென்னிலங்கையின் கடும்போக்காளர்களுக்கு இந்தத் தடை நடவடிக்கைகள் உற்சாகமளிக்கக் கூடியதாக இருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை மேலும் சர்வதேச சமூகம் வேறுபடுத்தி வைக்குமானால், தமிழீழ விடுதலைப் புலிகளும் தங்களது கடும்போக்கு பாணியைத் தொடரவேண்டிய நிலை ஏற்படும். எமது செயற்பாடுகளும், கொள்கைகளும் சர்வதேச சமூகத்தின் தலையீடுகளால் தீர்மானிக்கப்படுபவையல்ல.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தமானது தற்போது ஒரு மென் தீவிர யுத்தமாக மாற்றமடைந்துள்ளது.

இந்த நிலையில், சர்வதேச சமூகத்தினது தடை நடவடிக்கையானது சந்தேகத்துக்கிடமில்லாத வகையில் சிங்கள கடும்போக்காளர்கள் தங்களது வன்முறைகளை அதிகரிக்கவே உதவும். அவர்கள் போரின்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்துவிடலாம் என்று நம்பிக்கை கொண்டுள்ளனர். அப்படியான ஒன்று நடைபெறுமேயானால் - தமிழீழ விடுதலைப் புலிகளும் எதிர்ப்பு நடவடிக்கையை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும்.

ஐரோப்பிய ஒன்றியத் தடையானது - அமைதியை உருவாக்காது, போருக்கான நிலைமைகளையே உருவாக்கும். சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளால் முற்றுகைக்குள்ளாக்கப் பட்டுள்ள தமிழ் பொது மக்களினது வாழ்வைச் சீர்குலைத்துவிடும் என பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

# கண்காணிப்புப் பணியிலிருந்து வெளியேறப்போவதில்லை

## ஹென்றிக்சன் தெரிவிப்பு

கொழும்பு—

இலங்கையில் நாம் ஒரு போர் நிறுத்தத்தை கண்காணிக்க வந்த போதும், தற்போது ஒரு போரையே கண்காணித்துவருகிறோம். இருப்பினும், இலங்கையை விட்டு வெளியேறப்போவதில்லை என போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் பி.பி.சி செய்திச்சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்-

தற்போது போர்நிறுத்தம் வெறும் காகிதங்களில் மட்டுமே தான் இருக்கிறது. ஆயினும், அதன் பிரசன்னத்தை பேணுவது அவசியமானது.

இலங்கையில் நான்கு ஆண்டுகளாக போர்நிறுத்தத்தை கண்காணித்து வருகிறோம். தற்போது சுமார் 300 பேர் வரை கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல்களில் கண்காணிப்பாளர்களும் சிக்கியிருக்கிறார்கள்.

போர்நிறுத்தத்தை முறிப்பதாயின் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க எநதத்தளமும் இல்லாமல் போய் விடும். நாம் இருக்கும் வரை போர் நிறுத்தத்தை கண்காணிப்போம். எனவே, போர்நிறுத்ததலைத முறிக்கவோ, எம்மை இங்கிருந்து செல்ல வைக்கவோ முயற்சிக்காதீர்கள்.

போர்நிறுத்தம் ஏற்படுத்திய பின்னர் இலங்கை சந்திக்கும் அபாய சூழ்நிலை இதுதான். முன்னரங்க காவல் நிலைகள் மீது தாக்குதல் நடைபெறுகிறது. யுத்த டாங்கிகள் ஓடுகின்றன. இங்கு ஒரு மரபு வழி யுத்தம் நடைபெறாத போதும், கெரில்லாத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இந்த வன்செயல்களை தடுக்க சமாதானப் பேச்சுதான் தேவை.

ஆனால், யதார்த்தத்தில் இது நடைபெறும் என்று யாரும் நம்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## கொக்குவிலில் கிரனேட் வீச்சு!

கொக்குவில்—

கொக்குவில் - தலையாழிப் பகுதியில் காவலரண்மீது நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து இந்தப் பகுதியை சுற்றி வளைத்த இராணுவத்தினர் தேடுதல் நடத்தினர்.

அத்துடன், வீதியால் சென்ற மக்களை வழிமறித்து படையினர் தீவிர சோதனைக்குட்படுத்தினர். இதன் போது இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனினும், இந்த இரு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டதை ஊர்ஜிதப்படுத்தமுடியவில்லை.

## கிளைமோர் மீட்பு!

யாழ்ப்பாணம்—

ஈச்சமோட்டைப் பகுதியில் நேற்றுக்காலை படையினரால் கிளைமோர் குண்டு ஒன்று கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது 10 கிலோ எடையுள்ளதென்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## என்னை...

தெரிவித்தன.

இதேவேளை, இராணுவத்தளபதி 85 வீதம் குணமடைந்து விட்டதாகவும் இன்று அவர் செய்தியாளர்களைச் சந்திப்பார் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

## ஐரோப்பிய...

குழுவில் அங்கம் வகிக்கும் நோர்டிக் நாடுகள் இந்தத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## மிதிவெடியில் சிப்பாய் படுகாயம்

யாழ்ப்பாணம்

நாகர்கோவில் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இராணுவச் சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை 4.10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சிப்பாய் சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## படுகொலை...

என ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

அங்கு ஐ.நா.பொதுச் செயலாளருக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

## படையினரின்...

ஏ9 வீதிக்கு அண்மையாக சூனியப் பிரதேசத்தைக் கடந்து புலிகளின் நிலைகளை படையினர் தாக்கிய போதும் அவர்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, நேற்று முன்தினமிரவு புலிகளின் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. மேலும் நாகர்கோவில் பகுதியில் நேற்று மாலையும் விடுதலைப் புலிகளுடன் சண்டை இடம்பெற்றதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

எனினும், இந்தத் தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

## கூட்டுறவு ஊழியர்கள் வேலை நிறுத்தம்!

பருத்தித்துறை—

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் அதிகரித்த சம்பளப்படியான 2500 ரூபா கொடுப்பனவை கடந்த மாதம் முதல் இடைநிறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## பேர்ள் குறூஸ் கப்பலுக்கு...

ரித்திருப்பதுடன், கடற்படையும் தயார் நிலையில் உள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பரப்பில் இந்தியக் கடற்படை தனது கண்காணிப்பை அதிகரித்துள்ளது. விடுதலைப் புலிகள் தமது கடல் எல்லைக்குள் இது வரை பிரவேசிக்கவில்லை. எந்த நிலையையும் எதிர்கொள்ள நாம் எமது நிலையை தயார்படுத்தியுள்ளோம். கண்காணிப்புப் பணிகளை எமது கட்டுப்பாட்டு வான் பரப்பிலும், கடற்பரப்பிலும் மேற்கொண்டு வருகின்றோம்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வான் பிரதேசமும் கடற் பிரதேசமும் தமக்கு உரியது என விடுதலைப்புலிகள் கூறும் கருத்துத் தொடர்பாக எமது நிலைப்பாடு ஒன்றும் இல்லை. அது இலங்கையின் உள்விவகாரம்.

இறையாண்மை கொண்ட நாட்டில் ஒரு கடற்படைதான் இருக்க முடியும் என்பது பொதுவான கருத்து. எமைப் பொறுத்த வரையில் இலங்கையில் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

இதுவரையும் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தும் எந்தத் திட்டமும் இல்லை. விடுதலைப்புலிகளின் கடல் வல்லமை பற்றி கவலைப்பட வேண்டியது நாம் அல்ல. இலங்கை அரசும், இலங்கை கடற்படையும் தான். இலங்கை பேர்ள்ஸ் குறூஸ் கப்பலுக்கு எமது கடற்படை பாதுகாப்பு வழங்கவில்லை. இவ்வாறு தெரிவிக்கும் கருத்தில் எந்த உண்மையும் இல்லை. இந்தியாவிடம் இலங்கை அரசு எந்த உதவியும் கோரவும் இல்லை.

இலங்கையில் வன்முறை நடைபெறும் போது தமிழ் அகதிகள் இந்தியா வருவது தொடர்ந்து நடைபெறுகிறது. இதனைக் கூர்ந்து அவதானிக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை முரளி

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை முரளி புதன்கிழமை (17-05-2006) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், சத்தியலட்சுமியின் பாசமிகு கணவரும், கிருபானந்தன், நவரத்தினம், காலஞ்சென்ற அன்னரத்தினம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பராசக்தி தம்பதியினரின் மருமகனும், தையல்நாயகி, மகாலட்சுமி, கணேசலிங்கம் (கிராம உத்தியோகத்தர்), நாகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (19.06.2006) பிற்பகல் 1 மணிக்கு மூளாய் மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மூளாய் மத்தி,
சுழிபுரம்.

(C/5332)

தகவல்
கணேசலிங்கம்
(மைத்துனர்)

ஹப்பி மொபையில் HAPPY MOBILEE
(வடபகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)




இன்று முதல் எம்மிடம்
மொபிற்றல் G.S.M. காட் -350/=
மொபிற்றல் G.S.M. காட் -1000/=

என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
(கொள்வனவுக்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்)

more Mobitel

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி
TEL.& Fax NO.: 021 2264460 H.P.No.: 0777 745394

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.